# புகை-அற்ற ஒன்டேரியோ சட்டம் 2005
## எவ்வாறு இச்சட்டம் பாதிக்கிறது : மது அருந்தகங்களை மற்றும் உணவு விடுதிகளை

## அடிப்படைகள்

- புகை-அற்ற ஒன்டேரியோ சட்டம் (SFOA) மே 31, 2006 அன்று அமலுக்கு வருகிறது.
- இச்சட்டம் ஒன்டேரியோவின் தொழிலாளர்களையும், பொது மக்களையும் மறைமுகப் புகையின் (Second-hand smoke) இடர்களிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு, உள்ளடக்கப்பட்ட வேலையிடங்கள் மற்றும் உள்ளடக்கப்பட்ட பொது இடங்களில் புகை பிடித்தலை தடை செய்கிறது.

## மது அருந்தகங்கள் மற்றும் உணவு விடுதிகள்

உணவு அல்லது பானங்கள் பரிமாறப்படும், விற்கப்படும் அல்லது வழங்கப்படும் உணவு விடுதிகள் மற்றும் மது அருந்தகங்கள் உட்பட எந்த ஒரு உள்ளடக்கப்பட்ட பகுதியிலும் புகைபிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளது. உள்ளூர் நகராட்சி துணைச் சட்டங்களின் கீழ் சில சந்தர்ப்பங்களில் அனுமதிக்கப்பட்டருந்த குறிப்பாக ஒதுக்கப்பட்ட புகைபிடிப்பு அறைகள் (DSRs), இப்பொழுது தடை செய்யப்பட்டுள்ளன.

## வெளிப்புற மது அருந்தகங்கள் மற்றும் உணவு விடுதி பேடியோக்கள் (வெராண்டா)

பேடியோவில் மேற்கூரை இருந்தாலோ, அல்லது அதன் ஒரு பகுதியை மட்டுமேகூட கூரை மறைத்தாலோ, புகை பிடித்தல் தடை செய்யப்படுகிறது. மழை அல்லது காற்றோட்டம் அல்லது இரண்டையுமே தடுக்கும் திறன் படைத்த நிழர்கூரை (ஆணிங்க்), தார்பாலின், கேன்வஸ் தாள் அல்லது மற்ற பிற நிரந்தர அல்லது தற்காலிக மறைப்புக்கள் ஆகியவை மேற்கூரை எனப்படுகின்றன. தனி ஒரு மேஜையை மரைக்கும் தனியாக நிறுத்தப்பட்டிருக்கும் மேற்கூரையாக கருதப்படாது. எனினும் குடைகளை மேற்கூரையாக வேலை புரியும் வகையில் உபயோகித்தால் சோதனையாளர் அதை மேற்கூரையாக கருதலாம், அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கலாம்.

பணியிடங்களில் உள்ள கே.்ப்டீரியாக்கள் உணவு விடுதியாகவே கருதப்படுகிறது. இங்கு உணவு அல்லது பானங்கள் பரிமாறவோ, விற்கவோ அல்லது வழங்கவோபடுகிறது.

Ontario

கே.ஃப்டீரியா அல்லது உண்ணும் பகுதிக்கு அருகேயோ அல்லது அதன் பகுதியாகவோ உள்ள பேடியோ சம்பந்தமான புகைபிடித்தல் தடைகளுக்கும் கீழே பட்டியலிடப்பட்டுள்ள தேவைகளுக்கும் அவை இணங்கி நடக்க வேண்டும்.

## உரிமையாளர் மற்றும் வேலை கொடுப்பவரின் கடமைகள்

உரிமையாளர்கள் அல்லது பொறுப்பாளர்கள் கீழ்க்கண்டவற்றை உறுதி படுத்துவது அவசியமாகும் :

- புகை பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளது என பொதுமக்கள் அறிந்துள்ளதை உறுதிபடுத்த வேண்டும்.
- சாம்பல் கிண்ணங்களையும் மற்றும் சாம்பல் கிண்ணங்களாக உபயோகிக்கப்படுபவற்றையும் அப்புறப்படுத்த வேண்டும்.
- தங்கள் ஸ்தாபனங்களில் பொதுமக்களும் பணியாளர்களும் புகை பிடிக்காமலிருப்பதை உறுதிபடுத்த வேண்டும்.
- இவ்விதிகளை பின்பற்றாதவர்கள் ஸ்தாபனங்களில் இருந்து வெளியேற்றப்படுவதை உறுதி படுத்துங்கள்.
- *நோ ஸ்மோகிங் (புகை பிடிக்கக்கூடாது)* குறிகளை அனைத்து நுழைவு வாயில்கள், வெளியேறும் வழிகள், கழிப்பிடங்கள் மற்றும் மற்ற பிற பொருத்தமான இடங்களில், புகை பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளதை அனைவரும் அறியும் வண்ணம் ஒட்டி வைக்கவும். தேவையான அடையாளக் குறிகளைப் பெறுவது குறித்த தகவலுக்கென, தயவுசெய்து உங்கள் உள்ளூர் அரசு சுகாதாரப் பிரிவைத் தொடர்பு கொள்ளவும்.

## பொதுமக்களின் கடமைகள்

எவரும் மதுபானக் கடை அல்லது உணவு விடுதியில் புகை பிடிக்கக் கூடாது.

## அமலாக்கம்

சட்டத்தை அமல்படுத்தும் பொருட்டு, மதுபானக் கடைகள் மற்றும் உணவு விடுதிகள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பது மற்றும் சோதனையிடுவது போன்ற வேலைகளை உள்ளூர் அரசு சுகாதாரப் பிரிவுகள் மேற்கொள்ளும். இந்த சட்டத்துக்கு இணங்களை உறுதிப்படுத்தவோ அல்லது அதை அமல்படுத்தவோ அரசு சுகாதாரப் பிரிவு சோதனையாளர்கள் ஒரு இடத்தின் உள்ளே நுழைய அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## அபராதங்கள்

சட்டத்தின் இப்பிரிவை மீறுபவர்களுக்கு விதிக்கப்படக்கூடிய உயர்ந்தபட்ச கார்ப்பரேட் (கம்பனிகளுக்கென) அபராதம் பட்டியலிடப்படவில்லை. அதாவது அபராதத் தொகையை

நிர்ணயிப்பது அமைதி பேணும் நடுவரின் (Justice of the peace) பொறுப்பாகும். தனி மனிதர் ஒருவருக்கு உயர்ந்தபட்சம் $5,000 அபராதமாக விதிக்கப்படக்கூடும்.

இந்த தகவல் தாளை ஒரு விரைவு நோக்கீட்டு உபயோகத்திற்கென மட்டுமே பயன் படுத்த பரிந்துரைக்கப் படுகிறது. கூடுதல் தகவலுக்கென, தயவு செய்து உங்கள் உள்ளூர் அரசு சுகாதாரப் பிரிவைத் தொடர்பு கொள்ளவும்.

கட்டணமற்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டும் நீங்கள் தகவல் பெறலாம்.

- **INFOline** 1-866-396-1760
- **TTY** 1-800-387-5559

வேலை நேரம் : திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை.

புகை அற்ற ஒன்டேரியோ சட்டம் பற்றிய கூடுதல் தகவலுக்கென, தயவு செய்து சுகாதார முன்னேற்றத்திற்கான ஒன்டேரியோ அமைச்சக வலையகத்திற்கு வருகை தாருங்கள்: http://www.mhp.gov.on.ca/english/health/smoke_free/legislation.asp.

மே 2006



Ontario